நல்லூர் கிளை நூலகம்

எழில்மிகு இயற்கைக் காட்சிகளை வர்ணப் புகைப்படத்தில் தந்திடும் தரமான நிறுவனம்
நஷனல் ஸ்ருடியோ அன் சவுண்ட் சென்ரர்
பூநகரி வீதி,
பரந்தன்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

கலர் பிலிம் கருள்களை குறைந்த செலவில்
Processing & Printing
செய்து கொள்ளவும்
தொடர்பு கொள்ளவும்
National Studio
& Sound Centre
Poonagari Road.
PARANTHAN.

சுடர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆனி மீ 12 உ புதன்கிழமை ஹிஜரி 1406 ஷவ்வா பிறை 17 (26-06 1986) UTHAYAN A WEEKLY TAMIL DAILY கதிர் - 188

## கோஷ்டி மோதலுக்கு காரணமானோர் புலிகளால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26

நேற்று முன் தினம் யாழ் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற கோஷ்டி மோதலுக்கு காரணமானவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்தனர்.

இவர்கள் வைத்திருந்ததாகக் கூறப்படும் சில கைக்குண்டுகளும் புலிகளால் மீட்கப்பட்டன.

முஸ்லிம் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்கவே 'புலிகள்' இது விடயத்தில் தலையிட்டு சம்பந்தப்பட்டவர்களை கைது செய்தனர் என்று கூறப்படுகிறது.

இதே வேளை நேற்று முன்தினம் மரணமான மூவரில் ஒருவரான கல்தான் ஜவ்பரின் மரண விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

யாழ் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு க. கேசவன் இதனை நடத்தினார்.

ஜனஸா உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(இ-10)

## 900 தமிழர் திருமலையிலிருந்து கப்பலில் நேற்று பூஸாவுக்கு!

— திருமலை மாவட்ட செய்தியாளர் —

திருகோணமலை, ஜூன் 26

திருகோணமலை-நகரில் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்ட தமிழர்களில் சுமார் 900 பேர் நேற்று மாலை அவசர அவசரமாக கப்பல் மூலம் பூஸா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று இடம் பெற்ற இரண்டு நிலக் கண்ணி வெடித்தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து, இவ்வளவு பேரையும் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைப்பது என்று பாதுகாப்பு அமைச்சு திடீர் என்று முடிவு செய்தது.

கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த திருமலை நகர் சுற்றி வளைப்புத் தேடுதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்றுக் காலை 9 மணி வரை மொத்தம் 250 பேர் விடுவிக்கப்பட்டனர்.

காலை 10 மணி அளவில் இரண்டு நிலக் கண்ணி வெடித் தாக்குதல் சம்பவங்கள் பற்றிய செய்திகள் திருமலை பாதுகாப்பு அதிகாரிகளுக்குக் கிடைத்தன.

அதைத் தொடர்ந்து கைதானவர்களை விசாரணை செய்து விடுவிக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டன.

உடனடியாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதப்படை முகாமிலிருந்து அவை வரும் வாகனங்களில் ஏற்றப்பட்டு திருமலைக் கடற்படைத் தளத்தின் இறங்குதுறைக்குக் கொ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஜூலையில் 4 நாட்கள் மாநாடு

கொழும்பு, ஜூன் 26

சர்வகட்சி மாநாடு, ஜூலை 15, 16, 17, 18 ஆம் திகதிகளில் மீண்டும் நடக்கும்

நேற்று இரண்டாவது சர்வகட்சி மாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் இத்திகதிகள் அறிவிக்கப்பட்டன

ஆரம்பக் கூட்டம் அமைச்சரவை அலுவலகத்தில் நடைபெற்றது

ஜூலை 15, 16, 17, 18 ஆம் திகதிகளில் நடைபெறும் சர்வகட்சி மாநாட்டுக் கூட்டங்கள் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபை யோசனைகள் குறித்த கருத்துக்கள், அபிப்பிராயங்களை அரசியல் கட்சிகள் ஜூலை 11க்கு முன்னர், மாநாட்டுச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஆரம்பக் கூட்டத்தில் தெரிவித்தார்.

(இ-எ)

## வடக்கிலும் கிழக்கிலும்

# நிலக்கண்ணி: 3

# மாண்டவர்: 30

### ஊர்காவலர் - 15, பொலிஸ் - 6
### பொதுமக்கள் - 08, சாரதி - 1

அலுவலகச் செய்தியாளர் பி. வனிதராஜனும் திருமலை மாவட்ட செய்தியாளரும்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நேற்று மூன்று நிலக்கண்ணி வெடிச் சம்பவங்கள் இடம் பெற்றன.

ஒன்று வவுனியாவுக்கு அப்பால் உலுக்குளம் என்ற இடத்திலும், இரண்டாவது திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சேருவில என்ற இடத்திலும், மூன்றாவது புல்மோட்டையிலும் நிகழ்ந்தன.

இந்த மூன்று சம்பவங்களிலும் மொத்தம் 30 பேர் மாண்டனர் அவர்களில் 15 பேர் ஊர்காவல் படையினர். 6 பேர் பொலிஸார். ஒருவர் அரச சாரதி 8 பேர் பொதுமக்கள் (பயணிகள்).

#### உலுக்குளத்தில்

வவுனியாவுக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் உள்ள உலுக்குளம் என்ற இடத்தில் பஸ் ஒன்று நிலக்கண்ணிவெடியில் சிக்கியதால் எட்டுப் பேர் உயிரிழந்தனர். 40 பேர் வரையில் படுகாயங்களுக்கு ஆளானார்கள்.

14 பயணிகளின் நிலை கவலைக்கிடம் என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை இச் சம்பவம் நடைபெற்றது.

வவுனியா பஸ் நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை 7 30 மணியளவில் தனியார் பஸ் ஒன்று அனுராதபுரம் நோக்கிப் புறப்பட்டது.

பஸ்ஸில் சுமார் 45 பயணிகள் வரையில் இருந்தனர் பௌத்த பிக்கு ஒருவரும் அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்தார்.

மதவாச்சிக்கும் அனுராதபுரத்துக்கும் இடையே உலுக்குளம் ஊடாக பஸ் சென்று கொண்டு இருக்கையில் பெரிய குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டது.

அங்கு வைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணியில் சிக்கி பஸ் தூக்கி எறியப்பட்டது. அது சுக்கு நூறாகியது.

கவலைக்கிடமான நிலையில் உள்ள பயணிகளில் பலர் கை, கால்களை இழந்துவிட்டார்கள்.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் அனு

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுனி



முந்தியும் பல தடவையள் பக்கம் பாராமத் தானே திட்டங்கள் சமர்ப்பிச்சவை. இதுவும் அப்பிடி ஒரு பேப்பர் கட்டாகத்தான் இருக்கும். புதிசா என்ன இருக்கப் போகுது!

### 'சப்பாத்து' இளைஞர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

கன்வஸ் சப்பாத்து வைத்திருந்ததற்காக, வவுனியாவில், ஆயுதப்படையினரால் தடுத்து வைக்கப்பட்ட ஆறு தமிழ் இளைஞர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்றும் அதனாலேயே கன்வஸ் சப்பாத்துகள் வாங்கி வைத்திருந்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டதை ஏற்றுப் படையினர் விடுவித்தனர் என்று அறியப்படுகிறது.

இதேவேளை இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு முன்னர் ஏற்பாடு செய்திருந்த ஏஜன்சி, அவர்களை அங்கு அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்து திரும்பவும் கொழும்புக்கு அனுப்பி வைத்து விட்டதாக உதயனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

(அ)

## மாகாண சபைகளுக்கு

# கவர்னர், முதலமைச்சர்

### பிரதேச சபைகள் மட்டம் வரை நிர்வாகப் பரவலாக்கம் வரும்

#### அரசமைப்புச் சட்டதுக்குத் திருத்தம்

கொழும்பு, ஜூன் 26

நேற்று ஆரம்பமான சர்வகட்சி மாநாட்டில் அரசின் புதிய யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாகாண சபைகளின் திட்டம் அதில் அடங்கியுள்ளது,

மாகாணசபை, மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்ற அமைப்பு ரீதியில் நிர்வாகத்தைப் பரவலாக்க வகை செய்யப்படும்.

மாகாணசபை ஒவ்வொன்றுக்கும் கவர்னர், முதலமைச்சர் ஆகியோர் இருப்பர். அமைச்சரவையும் இருக்கும்.

நிர்வாகத்தை பரவலாக்கும் விதத்தில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

அந்தத் திருத்த நகல் மசோதா அடுத்த மாதம் 15 ஆம் திகதி சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

புதிய யோசனைகளின் படி, மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். சம்பந்தப்பட்ட மாகாண சபையின் அனுசரணையுடனேயே அவ்வாறு செய்ய முடியும்.

புதிய யோசனைகள் அடங்கிய திட்டத்தில் காணப்படும் ஏனைய முக்கிய அம்சங்கள் வருமாறு:

* திருகோணமலைத் துறைமுகமும் அதன் சுற்றுப் புறங்களும் எந்த ஒரு மாகாண சபையின் கீழும் வரமாட்டா. மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே அவை இருக்கும்.
* ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஜனாதிபதி கவர்னரை நியமிப்பார். நிறைவேற்று அதிகாரங்கள் கவர்னரிடம் இருக்கும்.
* மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கும்.
* மாகாண முதலமைச்சர், மற்றும் உறுப்பினர்கள் எம். பீக்களாக இருக்கவேண்டிய அவசியம்இல்லை.
* அமைச்சர் சபை ஒவ்வொரு மாகாணத்துக்கும் இருக்கும்.
* மாகாண சபைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பங்குபற்றிய பிரதிநிதிகள்

கொழும்பு, ஜூன் 26

சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் விவரம் வருமாறு;

* கம்யூனிஸ்ட் கட்சி: கே. பி. சில்வா, பீட்டர் கெனமன, டியூ. குணசேகரா (காலமான எம். பி)
* லங்கா சமசமாஜக் கட்சி: டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா, பெர்னாட் சொய்சா
* தமிழ்க் காங்கிரஸ்; குமார் பொன்னம்பலம், மோதிலால் நேரு, வி விநாயகமூர்த்தி
* நவ சமசமாஜக் கட்சி: வாசுதேவ நாணயக்காரா, விக்ரமபாகு கருணாரத்ன, ஜே அன்னா
* ஜனநாயக தொழிலா

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெடி மருந்துகள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 26

வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அருகில் காணப்பட்ட தென்னைமரங்களை அழிப்பதற்காக நேற்று முகாமிலிருந்து வெளியே வந்த சிப்பாய்களிடமிருந்து இரண்டு பெட்டிகள் நிறைய வெடிமருந்துகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

தென்னைகள் இராணுவத்தினால் நிர்மூலமாக்கப்பட்டன. இதற்குப் பாவிக்கப்பட்ட PB 3 A வகையைச் சேர்ந்த வெடி மருந்துகள் தங்களால் மீட்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ)

## அரசின் யோசனைக்கு ராஜீவ் முழு ஆதரவு

### கடிதத்தை ஜே. ஆர். வாசித்தார்

கொழும்பு. ஜூன் 26

இலங்கை அரசின் புதிய யோசனைகளுக்கு ஆதரவு தெரிவித்து பிரதமர் ராஜீவ் காந்தி எழுதியதாகக் கூறப்படும் கடிதத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று சர்வகட்சி மாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் வாசித்துக் காட்டினார்.

ராஜீவின் இரண்டு பக்கக் கடிதத்தில் சில பகுதிகளை மட்டும் அவர் வாசித்தார்.

'உங்களுடைய திட்டத்தைக் குறைக்காமல் அப்படியே அமுல் நடத்துங்கள்

அதற்கு இந்திய அரசு முழு ஆதரவு தரும்' — பிரதமர் ராஜீவ்காந்தி

இப்படி அந்தக் கடிதத்தில் எழுதியிருப்பதாகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் கட்சி குழுவில் குமாரசூரியர்

கொழும்பு, ஜூன் 26

முன்னாள் தபால், தந்தித் தொடர்பு அமைச்சர் செல்லையா குமாரசூரியரும் நேற்று சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டார்

இலங்கை மக்கள் கட்சியின் பிரதிநிதிகளில் ஒருவராக இவர் கலந்து கொண்டார்.

இலங்கை மக்கள் கட்சியின் ஏனைய பிரதிநிதிகள் வருமாறு;

1. விஜய குமாரணதுங்க (செயலாளர்)
2. சந்திரிகா விஜய குமாரணதுங்க.

(இ-எ)

புதிய யோசனைகள்

## தமிழர் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவில்லை

### காங்கிரஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

நேற்று நடைபெற்ற அரசியல்கட்சி மாநாட்டில் அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் திட்டம் தமிழ் தேசிய இனத்தின் நியாயபூர்வமான அபிலாஷைகளை எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறிவிட்டது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி இப்படிக் கருதுகிறது.

சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய யோசனைகள் குறித்து கொழும்பில் கட்சியின் மற்ற சகாக்களுடன் சுமார் ஒன்றரை மணிநேரம் ஆராய்ந்த பின்னர் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பே புதிய பெயரில் மாகாண சபை என்ற அமைப்பில் — புதிதாக வந்திருக்கிறது

சுமார் ஒன்றரை வருட

(4 ஆம் பக்கம் பார்க்க)

#### சுபநேரம்

26—6—1986

வியாழக்கிழமை

சுபநேரம்:- 7 25 முதல் 8 55 வரை

ராகுகாலம்:- 1.25 முதல் 2 55 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## புலிகள் கிறனேட் வீச்சு! ஊர்காவல் வீரர் பலி!!

### கந்தளாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் கிறனேட் வீச்சினால் கந்தளாயில் ஊர்காவல் படைவீரர் ஒருவர் பலியானார்,

கந்தளாயிலிருந்து 3 மைல் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் இந்தச் சம்பவம் நடந்ததாக விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது விடுதலைப் புலிகள் ஒருவரின் முன்னால் எதிர்பட்ட மூன்று ஊர்காவல் வீரர்மீது கிறனேட் வீசப்பட்டது என்றும் —

ஒருவர் பலியானார்; ஏனைய இருவரும் ஓடி ஒளிந்துவிட்டனர்; இறந்தவரின் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

(உ)

## பருத்தித்துறையில் 6 இராணுவம் பலி!

### புளொட் அறிவிப்பு

பருத்தித்துறை, ஜூன் 26

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் 2 மணியளவில் சுப்பர் மடம் நோக்கி முன்னேறிய இராணுவத்தை எதிர் கொண்டு தற்காப்பு இராணுவ நடவடிக்கையை மேற் கொண்ட போது ஆறு இராணுவத்தினர் பலியாகினர் பலர் படுகாயமுற்றனர் எமது தரப்பில் எந்த இழப்பும் இல்லை.

இப்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் குழுக்கள் புதுடில்லி சென்றன

புதுடில்லி. ஜூன் 25

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் விடுதலை அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை புதுடில்லி சென்றனர்.

இந்திய அரசின் அழைப்பின் மீதே அவர்கள் புதுடில்லி சென்றதாகத் தெரிய வந்துள்ளது.

இலங்கை அரசின் புதிய யோசனைகளை சமர்பிப்பதற்காகவே தமிழர் குழுக்களை புதுடில்லி அழைத்துள்ளது என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன

(உ-எ-2)

### அமெரிக்க கடற்படை கப்பல்கள்

கொழும்பு, ஜூன் 26

கொழும்புத்துறைமுகத்துக்கு இரண்டு அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் வந்துள்ளன.

கப்பல்களின் பெயர்கள் வருமாறு;

1 டேவிட் ஆர் ரே.

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையில் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பிராந்திய களஞ்சியத்தில்

# தொலைத்தொடர்பு பொருள்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ் தபால் நிலையத்துக்கு அருகில் இருக்கும் யாழ்பிராந்திய தொலைத் தொடர்புத் திணைக்களப் பிரதான களஞ்சியத்தில் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டிருக்கிறது.

தொலைபேசி உபகரணங்கள் முதலியன கொள்ளையிடப்பட்டுள்ளதால், பழுதடையும் தொலைபேசிகளைத் திருத்தும் வேலைகள் தாமதம் அடையலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கொள்ளைச் சம்பவத்தினால் வடபகுதி தொலைபேசி வாடிக்கையாளர்கள் சிரமப்படுவது மட்டுமல்ல, அத்தியாவசியத் தொலைபேசித் தொடர்புகளே முற்றாக ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தொலைத்தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-6)

## தோலகட்டி ஆச்சிரமம்: மினி முகாமாக்க திட்டம்?

யாழ்ப்பாணம், ஜூன் 26

சென்ற வெள்ளிக்கிழமை இந்தியத் துறவி ஒருவர் கொலை செய்யப்பட்ட தோலகட்டி ஆச்சிரமம் சிப்பாய்களின் மினி முகாமாகலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

துறவியின் கொலை, அடிக்கடி ஆச்சிரமத்துக்கு சிப்பாய்கள் சென்று செய்யும் அட்டகாசம் என்பனவே இவ்வாறான சந்தேகத்தைக் கிளப்பியுள்ளன.

பலாலி முகாமைப் பலப்படுத்தும் முகமாக, அதைச் சுற்றி பல மினி முகாம்களை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டு.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாகவே வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் ஓர் மினி முகாம் போடப்பட்டது.

இதே போல் தோலகட்டி ஆச்சிரமமும் மினி முகாமாகலாம் என அஞ்சப்படுகிறது.

தோலகட்டி ஆச்சிரமத்தில் அதன் பிரதம குருவானவரும் ஒரு துறவியும் மட்டுமே உள்ளனர்.

இங்கிருந்து தயாரிக்கப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலும் விற்பனையாகும் நெல்லிக்கிறஷ், நன்னாரி போன்ற குளிர்பான வகைகளின் தயாரிப்பு வேலைகள் ஸ்தம்பித்துள்ளன. (இ-5)

## குண்டு வீச்சு

திருகோணமலை, ஜூன் 26

செவ்வாய் அதிகாலை சீனன்வாடியில் உள்ள பெற்றோலியக்கூட்டுத்தாபன அலுவலகத்தின் மீது குண்டு வீசப்பட்டதாம்.

இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

தீவிரவாதிகள் தாக்கியதாகவும் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்புப் படையினர், ஊர்காவல் படையினர் திருப்பித் தாக்கியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

உ-எ-150

## இறந்தோர் எண்ணிக்கை 4 ஆக உயர்வு

மட்டக்களப்பு, ஜூன் 26

மட்டக்களப்பு கல்முனை வீதியில் களுவாவளை என்னும் இடத்தில் ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நான்குஆக அதிகரித்தது.

கடைசியாக 25 வயதான சிவனேசன் உயிரிழந்தார்.

அவரின் பிரேத பரிசோதனை முடிந்ததும் சடலத்தை ஆயுதப்படையினர் எரித்துவிட்டனர்.

ஏற்கனவே சனிக்கிழமை இரண்டு தமிழரும் ஞாயிறு ஒரு தமிழரும் துப்பாக்கிப்பிரயோகத்தில் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## "நேவி" விளையாட்டு விளையாடிய இளைஞர்

ஊர்காவற்றுறை, ஜூன் 26

'நேவி' விளையாட்டு விளையாடிய நான்கு இளைஞர்கள் போராளிகளினால் தண்டிக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் ஊர்காவற்றுறையில் நிகழ்ந்தது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:

காரைநகர் கடற்படை முகாமை அண்டிய பகுதியான ஊர்காவற்றுறையில் ஏற்கனவே பல தடவைகள் கடற்படையினரும், கறுப்புச்சட்டைக்காரர்களும் ஆயுதங்களோடு வந்து பொதுமக்களைத் துன்புறுத்தியுள்ளனர்.

அடிக்கடி ஷெல் தாக்குதல்களும் நிகழ்வதனால் மக்கள் பீதியோடு வாழ்ந்து வருகின்றனர்.

அண்மையில் நான்கு இளைஞர்கள் ஒன்று சேர்ந்து வேடிக்கையாக ஒரிரு வீடுகளின் வேலிகளையும் வெட்டி "கொட்டியா" "கொட்டியா" என்று சத்தமிட்டவாறு இரவு வேளையில் வீதியில் ஓடினர்கள்.

இதனால் பொது மக்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடத் தொடங்கினர்.

இதனை அறிந்த காவலுக்கு நின்ற போராளிகள் கைக்குண்டுகளை வெடிக்க வைத்தும், துப்பாக்கியால் சுட்டுக்கொண்டும் அந்த இடங்களை நோக்கி நகர்ந்தார்கள்.

இளைஞர்கள் நால்வரும் போராளிகளிடம் சிக்கிக்கொண்டனர்.

ஆத்திரமடைந்த போராளிகள் அந்த நான்கு இளைஞர்களையும் நையப் புடைத்தனர்.

தாங்கள் செயலிழந்த கைக்குண்டு, தோட்டாக்கள் போன்றவற்றிற்கான செலவை அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து அவர்களைப் போக விட்டார்கள். (இ-16)

## மரணதண்டனை இரண்டு பெண்களுக்கு மட்டுநகரில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 26

இரண்டு இளம் பெண்களுக்கு மட்டக்களப்புப் பகுதியில் நேற்று மின்கம்ப மரண தண்டனை விதிக்கப்பட்டது.

வந்தாறுமூலை அம்பலத்தடியில் ஓர் இளம் பெண்ணின் சடலமும் பட்டிருப்புப் பாலத்திற்கு அருகில் இன்னோர் இளம் பெண்ணின் சடலமும் காணப்பட்டன.

காட்டிக் கொடுப்போருக்கு இதுதான் தண்டனை என்று எழுதப்பட்ட பிரசுரம் ஒன்று காணப்பட்டது.

சடலங்கள் அடையாளங்காணப்படவில்லை. (உ-எ-21)

## மட்டக்களப்பு பிரசைகள்குழு செயலாளர் அறிக்கை தயாரிக்கிறார்

மட்டக்களப்பு, ஜூன் 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான அறிக்கைகளை தயாரிப்பதில் பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

மண்டூரில் படையினரால் கைது செய்யப்பட்ட 58 பேரில் தகவல் பெற முடியாதோர் 9 பேர் தொடர்பான விவரம்—

கல்முனையில் படையினரால் கைது செய்யப்பட்டு பயானத்தில் ஓவிட்டு இரு இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டது

புலிபாய்ந்தகல் படையினர்- போராளிகள் மோதலையடுத்து 90 வீடுகள் தீக்கிரை—

அம்பிலாந்துறை 12 வீடுகள் தீக்கிரை இந்து ஆலயம் சேதம்—

புதுமலையில் 16கடைகள், 175 வீடுகள் கொள்ளையடித்த பின்பு தீக்கிரை—

போன்றன இதில் அடங்குகின்றன.

இச் சம்பவங்கள் நடைபெற்ற நேரத்தில் குழுவின் செயலாளர் இந்தியாவில் தங்கியிருந்தார். (இ-21)

## விதை உருளைக்கிழங்கை இறக்குமதி செய்து தருக

### வடபகுதி உற்பத்தியாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 26

வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கை நேரடியாகத் தமக்கு இறக்குமதிசெய்து தருமாறு யாழ் மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்கள்,

இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு தரப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக நுவரேலியா விதை உருளைக்கிழங்கே தரப்படும் என்று அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்தே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளது.

"சென்றமுறை இங்கு தருவிக்கப்பட்ட நுவரேலியா விதை உருளைக்கிழங்கு நோய்த்தாக்கம் உள்ளதாக இருந்தது எனவே நுவரேலியா உருளைக்கிழங்கு வேண்டாம்.

'அத்துடன் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு நீண்டகாலம் பாதுகாத்து வைக்கக் கூடியது இலகுவில் அழுகமாட்டாது நோயினால் தாக்கப்படுவது குறைவு.

'இவற்றுக்கு மேலாக இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக்கிழங்கில் இருந்து அதிக விளைச்சல் கிடைக்கும்.

புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வோர் இவ்வாறு தமது கோரிக்கையில் தெரிவித்து உள்ளார்கள் (இ-9

### வேண்டுகோள்

விஸ்வமடு றெட்பானாவுக்கு அருகில் வைத்து இனந் தெரியாதவர்களினால் கடத்தப்பட்ட எஸ். வி. எம். ஸ்தாபனத்திற்கு சொந்தமான 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை மீட்டுத் தரும்படி ஸ்தாபனத்தின் ஊழியர்கள் புனித இயக்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-எ)


## விற்பனைக்கு

சீனி இல்லையா? தட்டுப்பாடா? கவலை வேண்டாம் எம்மிடம் பனை வெல்லம் போதியளவு உண்டு. இன்றே எமது "கற்பகம்" விற்பனை நிலையங்களை நாடுங்கள்.

பனை அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்:
தொலைபேசி: 23801


## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

## நெற்செய்கை பாதிப்புக்கு நஷ்டஈடு ரூபா 2,24,818

யாழ்ப்பாணம் ஜூன் 26

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு 1985-86 மாரிபோக நெற்செய்கையில் ஏற்பட்ட பாதிப்புக்கு நஷ்ட ஈடாக ரூபா 2, 24, 818 வழங்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி, புளியம்பொக்கணை, அக்கராயன் குளம், முழங்காவில், டலைபூநகரி, இராமநாதபுரம் உருத்திரபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த காப்புறுதி செய்த 218 விவசாயிகளுக்கு இத் தொகை வழங்கப்பட்டது.

இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார் யாழ் மாவட்ட விவசாய காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு

இப்போகத்தின்போது கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார்677 ஹெக்டர் விவசாயச் செய்கை காப்புறுதி செய்யப்பட்டது.

இதனால் காப்புறுதித் தவணைப் பணமாக ரூபா 51, 146 மட்டுமே சேகரிக்கப்பட்டது.

பளைப் பிரதேச விவசாயிகளே இவர்களுள் மிகக் கூடிய தொகையை நஷ்ட ஈடு பெற்றுள்ளார்கள்

இத்தொகை 72, 774 ரூபா என்றும் அவர் கூறினர். (இ-9)

## பஸ் மீது கல்வீச்சு!

யாழ்ப்பாணம் ஜூன் 26

செவ்வாய்காலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ்கள் சிலாபத்திற்கு அண்மையில் வைத்து கல்வீச்சுக்கு இலக்காகின.

இதனால் இந்த பஸ்கள் சில மணி நேரம் தாமதித்தே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

மற்றொரு யாழ்ப்பாண பஸ்ஸுக்கும் நொச்சியாகமத்தில் வைத்து கல் எறியப்பட்டது. (உ-10


## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- டென்மார்க்
- சவூதி அரேபியா

(அ) கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடா வரை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் யூலை 5ம் திகதிக்குப் பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

(ஆ) டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

(இ) சவூதி அரேபியாவுக்கு (Labours) தொழிலாளர்கள் உடன் தேவை. செல்ல விரும்புவோர் 5ம் திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போட்டுடன் 6 படங்களும் கொண்டு வந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து வெற்றிடங்களுக்கு முன்னுரிமை பெற்றுக் கொள்ளவும்.

(ஈ) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான பிரயாண சேவை (Colombo) கொழும்பில் இருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாவற்றுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி;

N. BALA

திருச்செல்வம் வீதி கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

பிற்குறிப்பு: பஸ் வழி இல:(764) பலாலி வீதி. கோண்டாவில் சந்திக்கு அருகாமை


## மக்கள் முகம்

### இளவாலை இளங்கதிர் நிர்வாகிகள்

யாழ்ப்பாணம் ஜூன் 26

இளவாலை வடக்கு இளங்கதிர் இயக்கசன சமூக நிலையப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

போஷகர்கள்: திரு வே. இ. தவக்குமாரன் செ. பத்திநாதர், ஆ. த. ஆறுமுகம், திருமதி வேதநாயகி அப்புத்துரை திரு. பொ. ராசேந்திரன் தலைவர். இ. இரவீந்திரன், உபதலைவர்: வே சண்முகநாதன்,செயலர். சி. சுமந்திரன், உபசெயலர், ஆ. சற்குணராசா, பொருளாளர். த. பிறேம்குமார், கணக்குபரிசோதகர். சி. குமாரலிங்கம் நூலகர். த. நகுலேஸ்வரன், விளையாட்டுப் பொறுப்பு சி. தவேந்திரன், கலை நிகழ்ச்சிப் பொறுப்பு. உ. சந்திரகுமார். (இ-ஒ)


### மேலும் அகதிகள்

சென்னை, ஜூன் 24

மன்னார், பேசாலையைச் சேர்ந்த 40 தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக செவ்வாயன்று ராமேஸ்வரத்துக்கு படகுகளில் போய்ச் சேர்ந்தனர்.

மொத்தம் 137 ஆண், பெண், குழந்தைகள் இக் குடும்பங்களில் இருந்தனர். (உ-எ)


நீங்கள் டென்மார்க் செல்ல விரும்பினால்



உங்கள் ஆசனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏமாற்ற பற்றிய பயமேயின்றி கொழும்பிலிருந்து நேரடியான பயணம்:

பிரயாணத் துறையில் நீண்டகால அனுபவத்தையும் மக்களின் நம்பிக்கையையும் பெற்றவர்களைச் சந்தியுங்கள்.

**எங்கள் சேவை:**

- எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
- சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
- Confirmations, Re-Confirmations
- பாஸ்போட், விசா, பொண்ட்
- இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்.

**ரெலிபோன்-ரெலெக்ஸ்**
24 மணி நேர சேவை

- எந்த நாட்டுக்கும் துரித தொடர்பு
- நியாயமான, சரியான கட்டணம்
- பாதுகாப்பு மிக்க இடம்
- இரவில் தங்க அறை வசதி
- பாதுகாப்பான வாகனத் தரிப்பிடம்

**Mack Communications & Travels**

இல: 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

Tele. 24836

dyn ads


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நல்லனவற்றையே நாளும் செய்தல் வேண்டும்

— சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை - அச்சாமை - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், 26-06-86 தொலைபேசி 24805 22073 த. பெ. 23


## கிளிநொச்சி நகரம்

கிளிநொச்சி நகரமும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் மக்கள் வாழாப் பகுதிகள் ஆகிவிட்டன. அங்கு இருக்கும் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன உறங்கிக் கிடக்கின்றன. அரசாங்க அலுவலகங்களும் அதற்கு விதிவிலக்கல்ல.

நகரின் மூன்று மைல் சுற்றுடல்களுக்குள் தான் சகல அரசாங்க அலுவலகங்களும் உள்ளன.

நகரின் மத்திய இடத்தில் கூட்டுப்படை முகாம் இருக்கிறது அதிலிருந்து எந்தநேரத்தில் ஷெல் குண்டு, துப்பாக்கிச் சூடும் புறப்படும் என்பதனை யாராலும் சொல்ல முடியாது.

அதன் காரணமாக அரசாங்க அலுவலகங்களுக்குப் போய்ப் பணிசெய்ய அலுவலர்கள் தயங்குகிறார்கள். எந்தக் கணமும் உயிராபத்தை எதிர்நோக்கித் தாம் கடமை புரிய முடியாது என்று கூறிப் பின்னிற்கிறார்கள்.

அவர்களது பயமும், தயக்கமும் நியாயமானவையே. உயிர் போனால் அதன் பின்னர் யார் பணியாற்ற வருவது?

இத்தகைய சூழ்நிலையில் கிளிநொச்சியில் சிவில் நிர்வாகம் பூரணமாக ஸ்தம்பித்து விட்டது. இம்மாதம் 14ஆம் திகதி வரை வழங்கப்பட்ட காலக்கெடுவுக்குப் பணிந்து கடமைக்குச் சென்ற அரச ஊழியர்கள், அதன் பின்னர் நகரில் நடந்த வன்செயல்களால் தமது கடமையைத் தொடர முடியவில்லை.

இதனால் நகரில் இயங்கிய அரசாங்கத் திணைக்களங்களை, சபைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது.

அது வரவேற்கக் கூடியதல்ல. எல்லா வகைகளாலும் ஆபத்தானது.

ஒரு நகரை உருவாக்குவது பெரிதும் பாரிய, சிரமம் நிறைந்த பணி. பல காலத்து முயற்சியின் பேரில், பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படுவது பின்னர் காலத்துக்குக் காலம் பெரும் பணத்தொகைச் செலவில் அபிவிருத்தி செய்யப்படுவது.

ஒரு பிரதேச மக்களின் வசதிக்காக அந்தப் பிரதேசத்தின் மத்தியிலேயே நகரம் நிர்மாணிக்கப்படுவது நடைமுறை. அந்த நகரத்தை அண்டித்தான் பிரதேச மக்களின் வசதிகள் பெருக்கப்படுகின்றன

ஆகையால் ஒரு நகரத்தை நினைத்தவுடன் அப்படியே சிரழியவிடுவது ஆகாது அதனால் மக்கள் அந்த இடத்தை முற்றாக ஒதுக்கிவிட ஏதுவாகும்.

தெற்கில் காடாக இருந்த பகுதிகளில் எல்லாம் நவீன நகரங்கள் உருவாக்கப்படுகின்றன. வடக்கில் மட்டும் கஷ்டப்பட்டுக் கட்டி எழுப்பப்பட்ட நகரத்தை அழிக்கலாமா? அழிய விடலாமா?

நகரின் மத்தியில் கூட்டுப்படை முகாம் இருப்பதால்தான் இந்தக் கஷ்ட நஷ்டமெல்லாம். எனவே கூட்டுப்படை முகாமை உடனடியாக மூடவேண்டும். அரசாங்க அலுவலகங்கள் நகரிலேயே தொடர்ந்து இயங்க வகை செய்ய வேண்டும்

காலுக்கு அளவான சப்பாத்து தைப்பதற்குப் பதில், சப்பாத்துக்கு ஏற்றால்போல் காலை வெட்டமுடியுமா?

ஆயுதப்படை முகாம் இருப்பதற்காக கிளிநொச்சி நகரத்தை, அலுவலகங்களை இடம் மாற்றக்கூடாது. ஆயுதப்படை முகாமை மூடி கிளிநொச்சி நகர் பழைய பொலிவுடன் இயங்க அரசு வகை செய்யவேண்டும்.

இல்லையேல் கிளிநொச்சி நகரத்தை அழித்த பொறுப்பு அரசாங்கத்தையே சாரும். அப்பகுதி மக்களை வேறு இடங்களுக்கு குடிபெயரச் செய்த பாவமும் அதனையே சூழும்.

# பஞ்சாப் நிலைமைக்கு டில்லி காரணம்

## சந்திரசேகர் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 25

பஞ்சாப் மாநிலத்தில் நிலைமை சீர்குலைந்து போவதற்கு மத்திய அரசே காரணம்.

ஜனதாக் கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டினார்.

பஞ்சாப் உடன்பாட்டை பஞ்சாப் — ஹரியானா முதல்வர்கள் வெவ்வேறு விதங்களில் புரிந்து கொண்டிருப்பதாகவும் இதனைச் சரிப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்

பஞ்சாபின் சிறுபான்மை இனத்தவரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதும், அவர்களைக் குடிபெயராது தடுப்பதும் பலவீனமான தலைமையிலான அரசின் முந்திய வேலை என மேலும் சந்திரசேகர் கூறினார் (இ-ஒ)

## யாஸீர் அரபாத்

ஆக்ரா, ஜூன் 25

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் காலுவிற்கு மேற்கொண்டிருந்த மூன்றுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தைப் பூர்த்தி செய்தார். (இ-ஒ)

## சிதம்பரத்துக்கு மேலும் பொறுப்பு

புதுடில்லி, ஜூன் 25

இணை அமைச்சர் திரு பி சிதம்பரத்துக்கு உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பும் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது

உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சரான திரு அருண்நேரு சுகயீனம் அடைந்துள்ளார். அவர் சுகமடைந்து வரும்வரையிலும் திரு சிதம்பரம் இப்பொறுப்பையும் வகித்து வருவார்.

பனிதவள அபிவிருத்தித்துறை அமைச்சரான திரு பி. வி. நரசிம்மராவ் சுகாதார குடும்ப நலத்திட்ட அமைச்சுகளையும் நிர்வகிப்பார். (உ-எ)

## மத்திய அமெரிக்க நாடுகளின் சுதந்திரம் பற்றி றேகன் எச்சரிக்கை

நியூயோர்க், ஜூன் 25

மத்திய அமெரிக்க நாடுகள் பலவற்றின் சுதந்திரம் ஆபத்தான நிலையில் இருக்கிறது எதிர்காலத்தில் இதனால் பல பிரச்சினைகள் உருவாகும்

அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றேகன் இப்படி எச்சரித்தார்.

நிக்கரகுவாவில் ரஷ்யாவின் அதிக அளவிலான ஈடுபாடும், பனமா மெக்ஸிகோ பகுதிகளில் ஏற்படும் அசம்பாவிதங்களும் அமெரிக்காவின் நீண்டகால பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன

—இவ்வாறு தொலைக்காட்சியில் அவர் தெரிவித்தார். (இ-ஒ)

## வெளி உலகில்

### கவிஞர் மரணம்

பம்பாய், ஜூன். 25

பிரபல ஹிந்திமொழிக் கவிஞர் பேராசிரியர் ராம் கவுத்தர் நேற்று பம்பாயில் காலமானார். 58 வயதான இவர் ஹிந்தி மொழியில் நகைச்சுவைக்கும் கவிதைகளுக்கும் பல விருதுகளைப் பெற்றவர் (இ-ஒ)

### குற்றச்சாட்டு

ஜெனீவா, ஜூன் 25

வழக்கமான ஆயுதங்கள் உற்பத்தியை அமெரிக்கா அதிகரித்து வருவதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியது

நாற்பது நாடுகள் பங்கு பற்றும் ஜெனீவா ஆயுதக் குறைப்பு மாநாட்டில் நேற்று பேசிய ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் திரு விலாடிமீர்பெட்ரோக்ஸி இவ்வாறு குற்றம் சுமத்தினார். (இ-ஒ)

### பேச்சுவார்த்தை

லண்டன், ஜூன் 25

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர் திரு. ஆலிவோ ஸ்ராம்போ இன ஒதுக்கல் குறித்து லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தென் ஆபிரிக்காவில் உடனடியாகத் தடைகள் விதிப்பது பற்றி திரு அலிவோ ஸ்ராம்போ விரிவாக பேச்சு நடத்தினார் (இ-ஒ)

### காணி சுவீகரிப்பு

பிரேஸில்லா ஜூன் 25

பிரேஸிலில் சுமார் 6 லட்சம் ஏக்கர் நிலப்பகுதியில் வீட்டு வசதியற்றவர்கள் குடியமர்த்தப் படவுள்ளனர்.

பிரேஸில் அரசாங்கம் அண்மையில் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றின் மூலம் தேவைக்கு அதிகமாகக் காணி வைத்திருப்போரது நிலங்களே முதலில் வலுக்கட்டாயமாக சுவீகரிக்கப்படும்

அந்த நிலம் முடியிருப்பு நிலமாக ஏழைமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் (இ-ஒ)

### சீக்கியரின் புனித பயணம்

இஸ்லாமாபாத், ஜூன் 25

நானூறு பேர் அடங்கிய சீக்கிய குழுவொன்று பாகிஸ்தான் வந்து சேர்ந்தது

சுமார் 10 நாட்கள் வரை தங்கியிருக்கும் இவர்கள் பல புனித ஸ்தலங்களைப் பார்வையிடவுள்ளனர் (ஒ)

## ரம்பால் டில்லி வருகை

புதுடில்லி, ஜூன் 25

காமன்வெல்த் தலைமைச் செயலாளர் டாக்டர் ரம்பால் புதுடில்லி வந்துள்ளார்

ஆகஸ்ட் மாதம் லண்டனில் நடைபெற உள்ள காமன்வெல்த் மாநாடு பற்றி பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அவர் கலந்தாலோசிப்பார்.

தென் ஆபிரிக்க இனஒதுக்கல் பிரச்சினை மிகமுக்கியமான அரசியல் மற்றும் தார்மீகப் பிரச்சினையாகும் என்று தெரிவித்த அவர் இதனைத் தீர்ப்பதில் இந்தியா முக்கிய பங்காற்றலாம் எனவும் கருத்து வெளியிட்டார் (இ-ஒ)

## தென்ஆபிரிக்கா

# வழிபாட்டுத் தலத்தில் கைதான 600பேர் பற்றி

## மனித உரிமைகள் இயக்கம்

ஜோகானஸ்பேர்க், ஜூன் 25

தென் ஆபிரிக்காவில் சுமார் 600 பேர் வரை ஆலயவழிபாட்டு நிகழ்ச்சிகளின்போது கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மிகுந்த சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டனர்

இவ்வாறு மனித உரிமை இயக்கம் அறிக்கை மூலம் தெரிவித்தது

மேலும் 20 கறுப்பு இனத்தவர் அங்கிலிக்கன் தேவாலயத்திலும் பள்ளிவாசல் ஒன்றிலும் தஞ்சமடைந்தபோது அங்கினால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் என்றும் மனித உரிமைகள் இயக்கத்தின் அறிக்கையில் கூறப்படுகிறது. (இ-ஒ)

### ஆதிவாசி தலைவர் கடத்தல்

இஸ்லாமாபாத், ஜூன் 25

பாகிஸ்தான் மேற்கு மாகாணமான பலூசிஸ்தானில் தனது உதவியாளர் இருவருடன் காரில் பயணஞ்செய்த ஆதிவாசித் தலைவர் நூர்முகமட் ஜமாலி துப்பாக்கி நபர்களால் கடத்தப்பட்டுள்ளார் என அறியப்படுகிறது. (ஒ)

### தாக்கப்பட்டார்

மொரக்கோ ஜூன் 25

பெராகுவே நாட்டின் எதிர்கட்சித் தலைவர் திரு. டொமிங்கோ லெய்னோ நாட்டினுள் பிரவேசிக்க முயன்ற பொழுது பொலிஸாரால் தாக்கப்பட்டார்.

மொராகுவேயிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள இவர் நாட்டினுள் அத்துமீறி பிரவேசிக்க முயன்றது இது ஐந்தாவது தடவையாகும். (இ ஒ)

### கைதியின் தண்டனை காவலருக்கு

மெக்சிக்கன்சிட்டி, ஜூன் 25

மெக்சிக்கோவில் அலாமஸ் சிறைச்சாலையில் கைதியாக வைக்கப்பட்டிருந்த லோஸ்ரோ சாப்லினோ என்பவர் தப்பி ஓடினார்

அதனால் அந்தச் சிறைக் கூடத்துக்குக் காவலாளியாயிருந்தவர் ஆயுட்கால கடுந்தண்டனைக்கு ஆளாகியுள்ளார்.

மெக்ஸிக்கோ நாட்டுச் சட்டங்களின்படி சிறையிலுள்ள எந்தக் கைதியாவது தப்பிவிட்டால் அந்தக்காவலாளியே கைதி அனுபவிக்க வேண்டிய மீதித் தண்டனையை அனுபவிக்கவேண்டும்

இப்படி ஒரு கடுமையான சட்டம் அந்த நாட்டில் அமுலில் இருக்கிறது. (இ ஒ)

## வடக்கில் வெங்காயப் பயிரை அழிக்கும்

# கோதிப்புழு நோயை ஒழிக்க

## விவசாயப் பிரிவு தெரிவிக்கும் வழிமுறை

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ் குடாநாட்டில் வெங்காயச் செய்கையை வெங்காயத்தாள் கோதிப்புழுநோய் தாக்கத் தொடங்கியுள்ளது.

வெங்காயச் செய்கையின் முதல்எதிரி இந்த நோய்தான் என்று யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை அறிவித்திருக்கின்றார்.

இந்த நோயில் இருந்து வெங்காயச் செய்கையைக் காப்பாற்ற மருந்து தெளிக்கும் அட்டவணை ஒன்றை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

மருந்து விசிறும் அட்டவணை வருமாறு:

| மருந்து அடிக்கவேண்டியகாலம் | மருந்தின்பெயர் | கலவை அளவு |
|---|---|---|
| 1 ஆவது முறை - நட்டு 5ஆம்நாள் — | பேறுசில் 15EC அல்லது எக்கலக்ஸ் 25EC (இலை முட்டைகளை அழிப்பதற்கு) | 1அவு - 2-3 கலன் நீர் |
| 2ஆவது முறை - நட்டு 10ஆம்நாள் | மேற்படி மருந்து | 1அவு - 2-3 கலன் நீர் |
| 3 ஆவது முறை - நட்டு 15ஆம்நாள் — | செலிக்குரோன் 500 EC | 1 அவு - 3 கலன் நீர் |
| 4 ஆவது முறை - நட்டு 20ஆம்நாள் — | குளோர்பைறிபொஸ் 20 EC அல்லது யோர்ஸ்பன் 20 EC அல்லது மக்பொஸ் 20 EC (இவை புழுக்கள் முட்டைகளை அழிப்பதற்கு) | 1 அவு 3 கலன்நீர் |
| 5 ஆவது முறை - நட்டு 26ஆம்நாள் — | செலிக்குரோன் 500 EC | 2 அவு - 3 கலன் நீர் |
| 6 ஆவது முறை - நட்டு 34ஆம்நாள் — | குளோர் பைறிபொஸ் 20 EC அல்லது யோர்ஸ்பன் 20EC அல்லது மக்பொஸ் 20 EC (இவை புழுக்கள் முட்டைகளை அழிப்பதற்கு) | 1 அவு- 3கலன் நீர் |
| 7 ஆவது முறை - நட்டு 44 ஆம்நாள் — | அம்புஸ் 25EC அல்லது சுமிசிடின் 25 EC — அல்லது அம்புஸ் 10 EC (இவை புழுக்களை அழிப்பதற்கு) | 1அவு - 9கலன்நீர் 1அவு -3 கலன் |

● மருந்து விசிறுமுன், முட்டைகள் காணப்படும்தாள்களைக்கையால் கிள்ளி முட்டைகளை அழித்துவிடுங்கள்.

● அதிகாலையில், அல்லதுமாலை அல்லது இரவு வேளைகளில் மருந்து விசிறுங்கள்

● ஒவ்வொரு 3 கலன் கலவைக்கும், ஒட்டும் மருந்தான சேர்பக்றன்ற் 1 அவுன்ஸ் சேர்த்து விசிறுங்கள்

மேலதிக விபரங்கட்கு உங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர், விவசாய விரிவாக்கச் சேவையாளர்களை நாடுங்கள். (இ-எ)

## சம்பளம் பெறுவதிலும் தமிழருக்குச் சிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள தமிழ் ஊழியர்களை கொழும்புக்கு வந்து சம்பளத்தைப் பெற்றுச் செல்லும்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாகம் அறிவித்துள்ளது.

சம்பளத்தை வீட்டு விலாசத்துக்கோ அல்லது அவர்களின் வங்கிக் கணக்கிற்கோ அனுப்ப முடியாது என்றும் நிர்வாகம் மறுத்துள்ளது என்று தெரியவருகின்றது.

இதனிடையில் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள தமிழ் ஊழியர்களில் சிலரை மீண்டும் வேலைக்கு அழைக்க இலங்கை வானொலியும் ரூபவாஹினியும் முடிவு செய்துள்ளன என்று தெரிகிறது (உ-எ-6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 26

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரப் பெற்றோர், பாதுகாவலர், அதிபர், ஆசிரியர், பங்கு பற்றும் கல்வி—ஒழுக்கநெறி பற்றிய கருத்தரங்கு சித்தன் கேணி கணேசவித்தியாசாலையில் ஜூன் 29 ஞாயிறு காலை நடைபெறும்.

முன்னாள் அதிபரும் பலாலி ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளருமான திரு க. கயிலாயநாதன் தலைமை வகிப்பார்.

தொடக்க உரையை வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் நிகழ்த்துவார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப சண்முகராசா, வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி பிரசைகள் குழுச் செயலாளர் திரு. மா சண்முகவடிவேல், காரைநகர் கலாநிதி தியாகராச மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு செ. பத்மநாதன், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய ஆசிரியை திருமதி பத்ம சுந்தரி சிவகுருநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (இ-எ)

## பென்ஷன் பெறுவோர் திண்டாட்டம்

ஊர்காவற்றுறை ஜூன் 26

ஊர்காவற்றுறை மக்கள் வங்கியினூடாக பென்ஷன் பெறுவோர் பென்ஷன் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர்

பாதுகாப்பற்ற இடத்தில் ஊர்காவற்றுறை கடை வீதியில் அமைந்திருக்கும் இவ்வங்கிக்குரிய புதிய இடம் தெரிவு செய்யப்பட்டும் வங்கி இன்னமும் இடம் மாறவில்லை. (இ-16)



பொய்யாமொழி

குறள்:

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார் என்னைகொல் ஏதிலார் மாட்டு

பொருள்:

நெருங்கிப் பழகியவரின் குற்றத்தையும் புறங்கூறித் தூற்றும் இயல்புடையவர் பழகாத அயலாரிடத்து என்ன செய்வாரோ?

## இலவச நீரிழிவு சிகிச்சை நிலையம்

### கிறீன் மெமோரியல் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம் ஜூன் 26

இலவச நீரிழிவு சிகிச்சை நிலையம் ஒன்றை யாழ் லயன்ஸ் சமூகம் நடத்துகின்றது.

ஜூன் 28 சனிக்கிழமை காலை 9 30 மணிமுதல் 11.30 மணிவரை மானிப்பாய் கிறீன் மெமோரியல் ஆஸ்பத்திரியில் இலவச சிகிச்சை நிலையம் நடத்தப்படும்.

லயன்ஸ்சமூக வைத்தியர்கள் சிகிச்சை அளிப்பர்

நீரிழிவு ஒரு கடுமையான பல இன்னல்களை விளைவிக்கக்கூடிய நோயாகும். ஆதலால் அனைவரும் நீரிழிவு இருக்கின்றதா என்பதை வைத்தியர்களைக் கொண்டு பரிசீலனை செய்வது அவசியம்.

நீரிழிவு இருக்கக் கண்டால் சிகிச்சைமுறை பற்றியும் ஆலோசனை வழங்கப்படும்.

பின்னர் அதனைத் தடுக்கும் முறை சிகிச்சை முறை ஆகியன பற்றி புலமை பெற்ற வைத்திய அதிகாரிகளினால் விளக்கப்படும்.

இப்படி லயன்ஸ் சமூகம் விடுத்த குறிப்பில் கூறப்பட்டுள்ளது (இ-எ)

## மக்களை அணிதிரட்டாத போராட்டம் வெற்றிபெறாது

### அஞ்சலிக் கூட்டத்தில் டேவிற்சன்

யாழ்ப்பாணம், ஜூன் 26

மக்களை இணைக்காது, மக்களை அமைப்பாக அணிதிரட்டாத போராட்டம், ஆயுதபலத்தைக் கொண்டு மட்டும் வெற்றி பெற முடியாது எனவே அன்பார்ந்த மக்களே போராட்டத்தில் எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்

சாவகச்சேரி சந்தையில் நடைபெற்ற ரஞ்சனின் வீர அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் டேவிற்சன் மேற்கண்டவாறு கூறினார்

23 06 86 அன்று நாவற்குழியில் சிறீலங்கா இராணுவத்துடன் நடந்த மோதலில் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்கி மரணமடைந்த மக்கள் விடுதலைப்படை வீரரான மட்டுவிலைச் சேர்ந்த ரஞ்சனின் (கணேசதாஸ்) இறுதி ஊர்வலம் செவ்வாயன்று நடைபெற்றது

மட்டுவிலுள்ள ரஞ்சனின் இல்லத்தில் இருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டது ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர்

சாவகச்சேரி சந்தையில் ரஞ்சனின் சடலம் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கானோர் ரஞ்சனுக்கு தமது அஞ்சலியை செலுத்தினர். சாவகச்சேரி சந்தையில் நடைபெற்ற ரஞ்சனின் வீர அஞ்சலிக்கூட்டத்தில் டேவிற்சன் மேலும் கூறியதாவது.

களத்திலே எமது இன்னுயிர் தோழர்கள் பலரை நாம் இழந்துவிட்டோம் ஆயினும் நாம் உறுதி குலையாமல் மண்ணை மீட்கவும் மக்களைக் காக்கவும் இறுதி வெற்றி வரை போராடியே தீருவோம்.

இங்கே ரஞ்சனின் உடலைக் கண்டு தாய்மார்களும், சகோதரர்களும் கண்ணீர் விட்டுக் கதறினார்கள் இன்னும் நீங்கள் எத்தனை நாளைக்கு கண்ணீர் விட்டே காலத்தைக் கழிக்கப் போகிறீர்கள்.

களத்திலே நின்று எதிரியை எதிர்த்துப் போரிடும் இயக்கங்களுக்கிடையே ஐக்கியம் என்பது மிக முக்கியமாகும் இது இல்லாவிட்டால் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்

இவ்வாறு டேவிற்சன் குறிப்பிட்டார்.

அஞ்சலிக் கூட்டத்தை அடுத்துரஞ்சனின்சடலம் சாவகச்சேரி நகர மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு மக்கள் விடுதலைப்படையினரின் மரியாதை வேட்டுக்கள் தீர்க்க தகனம் செய்யப்பட்டது.

ரஞ்சனின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து சாவகச்சேரி மாவட்ட பொதுமக்கள் வெகுஜன அமைப்புக்கள் சார்பில் பல்வேறு அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியாகியிருந்தன.

வீதிகள் யாவும் தோரணங்கள் கட்டப்பட்டு இருந்தன. கடைகள் பூட்டப்பட்டு இருந்தன. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

DELICIOUS AnL ICECREAM
MARKETED BY DYN ADS MARKETING
I LOVE
"அணில்"
ICE CREAM

# உதயன்

26 — 06 — 1986 வியாழக்கிழமை

வைபவங்கள் இனிக்க
'அணில்' ஐஸ்கிறீம்
பரிமாறுங்கள்
வசதியான 80 ml பிளாஸ்ரிக் 'கப்' களில்
ரூ. 3-50 மட்டுமே
மேலதிக விபரங்களும் உண்டு.
Also available:
FAMILY BLOCKS, GALLONS
dyn ads marketing
476, Main Street, CHUNDIKULI.
(Opposite St. John's College)

கிளிநொச்சியில்

# 5 முகாம்களில் 4 ஆயிரம் அகதிகள்

கிளிநொச்சி, ஜூன் 26 கிளிநொச்சி அரம்பா விதங்களைத் தொடர்ந்து அகதிகளான நிலையில் சுமார் நாலாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஐந்து முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் கிளிநொச்சி, திருநகர், ஜெயந்திநகர், கணேசபுரம், கனகபுரம், பரவிப்பாஞ்சான், இரத்தினபுரம், உதயநகர், ஆனந்தபுரம் ஆகியஇடங்களைச்சேர்ந்தவர்கள்.

இவர்களது அத்தியாவசிய தேவைகளை கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக்குழு உட்பட பல பொது ஸ்தாபனங்கள் கவனித்து வருகின்றன.

இதனைவிட மேலும்பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடு வாசல்களையும் விட்டு தூர இடங்களிலுள்ள நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேசமயம் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் தங்கள் பழைய இடங்களுக்குத் திரும்பும் பட்சத்தில் மாத்திரமே அக்குடும்பங்களுக்குஒருவார காலத்துக்கு உதவியளிக்க முடியும் என அரச அறிவித்துள்ளதாகத் தெரிகிறது. (இ-76)

## ஜனாதிபதியின் செயலாளர் ரஷ்யா பயணம்

கொழும்பு, ஜூன் 26 ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் ரஷ்ய விஜயத்துக்கான புதிய திகதியை நிர்ணயிப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் ஒரு குழு மாஸ்கோ பயணமாகியது.

ஜூன் 29 இல் 12 நாள் ரஷ்ய விஜயத்தை திரு ஜெயவர்த்தன மேற்கொள்ள இருந்தது— அந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டு விட்டது என்பதும்—உதயன் வாசகர்கள் அறிந்ததே. இ-எ

தீவிரவாதிகளுக்கு பயிற்சி முகாமா?

## சர்வதேச அமைப்பு எதுவும் பார்க்கலாம்

சிவ்சங்கர் சொல்கிறார்

லண்டன், ஜூன் 25 இந்தியாவில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது, முகாம்கள் இருக்கின்றன என்பதை இலங்கையினால் நிரூபிக்க முடியுமா?

எந்த சர்வதேச அமைப்பும் இந்தியாவுக்கு வந்து இது சம்பந்தமாகப் பார்வையிடலாம்'

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி சிவ்சங்கர் லண்டனில் பேசுகையில் சொன்னார்.

அமைச்சர் சிவ்சங்கர் மேலும் சொன்னதாவது:

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும்படி இலங்கை அரசை, அந்த நாட்டின் மீது செல்வாக்குள்ள நாடுகள் தூண்டவேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்று காணப்படுவதையே இந்தியா விரும்புகிறது.

இப்படி அமைச்சர் சிவ்சங்கர் சொன்னார். (இ-எ-2)

## கிளிநொச்சி நிலையை நேரில் விளக்க

### அரச அதிபர் கொழும்பு விரைவு

யாழ்ப்பாணம், ஜூன் 26 கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. என். ஜெயநாதன் இன்று வியாழக்கிழமை கொழும்பு செல்கிறார்.

தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களினால் கிளிநொச்சி மக்கள் அடைந்துள்ள கஷ்டங்கள், அரச செயலகங்கள் இயங்க முடியாத நிலை ஆகியன குறித்து உள்நாட்டமைச்சர், தேசிய பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஆகியோருக்கு நேரில் எடுத்துச் சொல்லவே கொழும்பு செல்வதாக அரச அதிபர் திரு. ஜெயநாதன் தெரிவித்தார்.

வன்முறைச் சம்பவங்களினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான மக்கள் அரச உதவி இன்றி கஷ்டப்படுகின்றனர்.

இதுபற்றியும் கொழும்பு அரசு அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லவிருப்பதாக திரு ஜெயநாதன் மேலும் சொன்னார்.

''கிளிநொச்சியில் உள்ள எனது வசிப்பிடமே சேதமடைந்துள்ளது. இந்நிலையில் அரச ஊழியர் நிலை எப்படி இருக்கும் என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவேமுடியவில்லை''

இப்படி அரச அதிபர் திரு ஜெயநாதன் சொன்னார். (இ-எ-6)

## சிலுவை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 26 தோலகட்டி மௌன ஆச்சிரமத்தில் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சங் சகோதரர் இம்மானுவேல் வென்செஸ்லோஸ் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாகச் சிலுவை ஊர்வலம் பருத்தித்துறை பொது மக்களால் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் முடிவுறும் அங்கு திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

சமய வேறுபாடின்றி மக்கள் ஒன்றித்து இந்த ஏற்பாட்டினைக் கவனித்து வருகிறார்கள் ஊர்வல நேரம் வழிநெடுகலும் உள்ள கடைகளைப் பூட்டவும் கறுப்புக் கொடிகள் பறக்க விடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ)

குருநகர் கடற்றொழிலாளர் படுகொலை!

# கும்பிட்ட நிலையில் பபியன் சுடப்பட்டிருக்கலாம்

## மரண விசாரணையில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 26 காலஞ்சென்ற பபியன் அலோசியஸ் விக்டோரின் கும்பிட்ட நிலையில் சுடப்பட்டிருக்கலாம். அவருடைய வலது சுட்டு விரலில் ஒரு சன்னமும் காணப்பட்டது. அது பொலிஸாரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

குருநகர் கடற்றொழிலாளர் மரண விசாரணை புதன்கிழமை காலை யாழ் மேல் நீதிமன்றத்தில் யாழ் பதில் நீதிவான் திரு கே. பி. எஸ். வரதராசா முன்னிலையில் நடைபெற்றபோது இத்தகவல் வெளியானது

சட்டத்தரணிகள் திரு. இராஜா விசுவநாதன், திரு. பா தவபாலன் ஆகியோர் இறந்தவர்களின் நலனைக் கவனித்தார்கள்.

யாழ் அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் சுப்பிரமணியம் ரவிராஜ் மரண பரிசோதனை அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

காலஞ்சென்றவரின் உடலில் 16 வெளிக்காயங்கள் காணப்பட்டன இவற்றுள் மூன்றைத் தவிர ஏனையவை சூட்டுக் காயங்களாகும். அதிவேக துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட காயங்கள், மூன்று அடி தூரத்தில் இருந்து சுடப்பட்டிருக்கலாம்.

பரிசோதனை நடைபெறுவதற்கு இருபத்து நாலு மணித்தியாலங்களுக்குள் மரணம் சம்பவித்திருக்கலாம்

இவ்வாறும் டாக்டர் சுப்பிரமணியம் ரவிராஜ் தனது மரணபரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டார்.

### மனுவேல் பயஸ்

56 வயதுடைய மனுவேல் பயஸ் என்பவர் முழந்தாளிட்டுக் குனிந்து நின்ற நிலையில் சுடப்பட்டு இறந்திருக்கலாம்.

டாக்டர் பஸ்தியாம்பிள்ளை ஈஸ்வரராஜ் மரண பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பித்து சாட்சியம் அளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

சம்பவ தினம் கடற்றொழிலுக்கு தூய ஒளி படகில் சென்ற தனது சகோதரரான ஞானப்பிரகாசம் அன்ரனி ரேமண்ட் இன்று வரை காணவில்லை. எனது ''தூய ஒளி'' படகு சேதமடைந்த நிலையில் மண்டைதீவு கடற்கரையில் இருந்து கொண்டுவரப்பட்டது

—இவ்வாறு குருநகரைச் சேர்ந்த பிலிப் பிரேமன் சாட்சியம் அளித்தார்.

யாழ் பதில் நீதிவான் திரு. கே. பி எஸ். வரதராசா மேல்விசாரணையை இன்று காலை வரை ஒத்திவைத்தார். (இ-9)

தேவை

உதவியாளர் பெண்கள் தொழிற்சாலையொன்றில் வேலை செய்வதற்கு 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு வெற்றிடமுள்ளது. சுண்டுக்குளியிலிருந்து ஒரு மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக 28.6.86 சனிக்கிழமை காலை 9-11 மணிக்கிடையில் நேரில் வரவும். dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி.

ஓர் முக்கிய அறிவித்தல்

தோலகட்டி தயாரிப்புகள் நகரில் தாராளமாக கிடைக்கின்றது. தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது எது எப்படியானாலும் எமது தயாரிப்புகள் தொடர்ந்து கிடைக்கும் போலிகள்! கவனம். எமது நெல்லிரச லேபலில் ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு. அதில் நேரம் 6 20 மணியைக் காட்டுகின்றது. ஆகவே உன்னிப்பாக கவனித்து வாங்கவும், இவ் இளவேனிற் காலத்தில் தோலகட்டி நெல்லிரசம் உங்கள் தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும்.

ஏகப் பிரதிநிதிகள்

ஜோ. எகஸ்டன் — செபமாலை தாசர்சபை
செனித் மார்கட்டிங் — தோலகட்டி
யாழ்நகர். — வயாவிளான்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

வரணி மிசன் விற்பனை நிலையம்

145. நவீன சந்தை; யாழ்நகர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி 26—06—1986.

Printed and Published by Utheyan Publications (Private) Ltd, 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number Q J 60 N 86

## வயாவிளான் மாணவருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 26 வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்த க. பொ. த. சாதாரண வகுப்பு மாணவர்கள் க. பொ. த. சாதாரண தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை (30-6-86) க்கு முன்னர் புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை தமிழ்க் கலவன் பாடசாலையில் சந்திக்குமாறு வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் கேட்டிருக்கிறார் (இ-எ)

## 900 தமிழர் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு செல்லப்பட்டனர்.

எல்லாரையும் வாகனங்களில் ஏற்றிக் கொண்டு செல்லப்படுவதாகத் தகவல் கிடைத்ததும் கைதானவர்களின் தாய்மார், மனைவிமார், சகோதரிகள் 'படை' எடுத்து முகாமுக்கு வந்தனர்.

அவர்கள் பார்த்து இருக்க அனைவரும் வாகனங்களில் ஏற்றி இறங்கு துறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மாலை 4 மணி அளவில் சுமார் 900 பேரையும் ஏற்றிக் கொண்டு 524 இலக்கம் கொண்ட கடற்படைக் கப்பல் பூஸாவுக்குப் புறப்பட்டது. (உ-எ-150)

## தமிழர் அபிலாஷ:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் பேச்சுவார்த்தை நடத்தி — பார்த்தசாரதி, பண்டாரி, சிதம்பரம் என்று பலருடன் கதைத்து கடைசியாகக் கண்டது இதுதானா?

யாரை யார் ஏமாற்றுகிறார்கள்?

இப்படி திரு. குமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார். (உ)

## நிலக்கண்ணி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினர் ஹெலிகொப்டர்களிலும் விமானங்களிலும் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்று, காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர், அனுராதபுரம் நகரில் பதற்றம் ஏற்பட்டது

### சேருவில சம்பவம்

சேருவில தொகுதியில் உள்ளது சேருநுவர கிராமம். பிரதேச உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் சொந்தமான ''பிக்-அப் வான்'' ஒன்றில் 15 ஊர்காவல்படையினர் [illegible] கொண்டு [illegible] அரச ஊழியர்கள் ஜீப் சாரதி, வானை ஓட்டி வந்தார்.

சிற்றாறு என்னும்இடத்துக்கு அருகில் நிலக்கண்ணி வெடியில் வான் சிக்கியது.

சாரதி உட்பட, வானில் வந்த அனைவரும் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

காலை 8 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

வான் சுக்குநூறாகியது. உயிரிழந்தோரின் சடலங்கள் சின்னாபின்னமான நிலையில் சிதறிக் கிடந்தன.

பகல் 12 மணியளவில் மரண விசாரணை நடத்துவதற்காக பதில் நீதிவான் திரு. எம். கே. செல்லராசா ஹெலிக்கொப்டர் மூலம் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

இறந்தவர்களில் இருவரின் பெயர்கள் மட்டுமே கிடைத்தன.

விவரம் வருமாறு:

# விளையாட்டரங்கு

மென்பந்து கிரிக்கெட்

## அரியாலை அணி சாம்பியன்

### உரும்பராய் சுற்றுப் போட்டியில்

யாழ்ப்பாணம், ஜூன் 26 உரும்பராய் விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய கழக அணி சாம்பியனானது.

இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணிஇரண்டாவது இடத்தைப் பெற்றது.

11 பேர் பங்குகொள்ளும் 20 ஓவர்களை கொண்ட போட்டியாக இது நடத்தப்பட்டது.

இந்த இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி அணி 20 ஆவது ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது.

லோகன் 15 ஓட்டங்களைப் பெற்றார்.

தோமஸ், முரளிதரன் ஆகியோர் முறையே 10, 15 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 14.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றிக்குத் தேவையான 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆட்டம் இழக்காமல் 47 ஓட்டங்களைப் பெற்ற எஸ் டி. குலநாதன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், இந்தப் போட்டியின் சிறப்பு வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்

தோமஸ் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவானார். (உ-7)

## செல்லப்பா முதலிடம்

வட்டுக்கோட்டை, ஜூன் 26 சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் 570 புள்ளிகளைப் பெற்ற செல்லப்பா இல்லம் (பச்சை) முதலாவது இடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியில் கடந்த வருடமும் இந்த இல்லமே முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் 570 புள்ளிகளைப் பெற்றசெல்லப்பா இல்லம் (பச்சை) முதலாவது இடத்தையும் 411 அரைப் புள்ளிகளைப் பெற்ற கனகரத்தினம் இல்லம் (சிவப்பு) இரண்டாவது இடத்தையும் 405 அரைப் புள்ளிகளைப் பெற்ற சிவபாதசுந்தரம் இல்லம் (நீலம்) மூன்றாவது இடத்தையும் பெற்றன.

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா, யாழ் கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. கா. சந்திரராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

17 வயதுக்குட்பட்ட பிரிவில் செல்வன் தியாகராசாகருணாகரன் இரண்டு வருடங்களாக சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது. (இ-116)

## சென்றலைட்ஸ் அணிக்கு சென். ஜேம்ஸ் வெற்றிக்கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 26 சென் ஜேம்ஸ் வெற்றிக் கேடயத்தை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சுவீகரித்தது.

சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியிலேயே சென்றலைட்ஸ் அணி சாம்பியனானது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி அணி 12 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடிய சென்றலைட்ஸ் அணி 11 வது ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

அபாரமாக ஆடி ஆட்டத்தை திசைதிருப்பிய கே மனோஜ்குமார் இந்தப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராகவும் — இந்தச் சுற்றுப்போட்டியின் சிறப்பு வீரராக எம். மதிவதனனும் தெரிவு செய்யப்பட்டனர்.

சென். ஜேம்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு சிருசியகுமார், கே. பிரேம்குமார் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர். (உ-7)

## பங்கு பற்றி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் காங்கிரஸ்: ஏ. அஸீஸ், வி. பி. கணேசன், ஏ. சாமி முத்து

- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்: எஸ். தொண்டமான், எம். எஸ் செல்லச்சாமி, எம். தேவராஜ்
- ஐக்கிய தேசியக்கட்சி: ஹர்ஷா அபேவர்த்தன, டாக்டர் எம். ஸி எம். கலீல், திருமதி ரங்கநாயகி பத்மநாதன்

திரு செ இராசதுரை, திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் உட்பட பல அமைச்சர்களும் மாநாட்டில் பங்குபற்றினர். (உ-எ)

1. டி வி. தலநாயக்கா (சாரதி)
2. வில்லியம் பெரேரா

### புல்மோட்டை சம்பவம்

பயணிகள் பஸ் ஒன்றுக்கு பாதுகாப்பாகப் பொலிஸார் முன்னே சென்று கொண்டிருந்தனர்

புல்மோட்டையில் இருந்து சிறிது தூரம் சென்றவுடன் முன்னே சென்று கொண்டிருந்த பொலிஸ் ஜீப் நிலக்கண்ணி வெடிக்குள் சிக்கியது.

ஜீப்பில் இருந்த பொலிஸாரில் 6 பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயம் அடைந்தார். (உ-எ-150)

## அமெரிக்க::

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கக் கடற்படை நாசகாரி. 300 வீரர்கள் இக்கப்பலில் உள்ளனர்.

2. ஹாயம்பா. 175 வீரர்கள் உள்ளனர்

ஜூன் 27 காலை இக் கப்பல்கள் துறைமுகத்தை விட்டுச் செல்லும். (இ-எ)

## அரசின்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. ஜெயவர்த்தன தெரிவித்தார்.

சரியாக மாநாடு பிற்பகல் 4.10க்கு ஆரம்பமானது.

ஜனாதிபதி, ஆரம்ப உரையின் பின்னர் அரசின்புதிய யோசனைகளைச் சமர்ப்பித்தார். (உ-எ)

## பருத்தித்துறை

1ஆம் பக்கத்தொடர்ச்சி

நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கடந்த 19 ஆம் திகதி மன்னார்-மதவாச்சி வீதியில் பெரியகட்டு என்னும் இடத்தில் நடைபவனியாக வந்த இராணுவத்தினரை எதிர் கொண்டபோது 17 இராணுவத்தினர் பலியானதோடு பலர் படுகாயமுற்றனர். எமது தரப்பில் எதுவித சேதமுமில்லை.- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## பொங்கல் விழா

மானிப்பாய், ஜூன் 26 நவாலியிலுள்ள ஞான வயிரவர் கோவில் வருடாந்த பொங்கல் விழா இன்று 26 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறுகிறது. (இ-90)

## மாகாண.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரிகள் விதிக்கும், கடன் வாங்கும் அதிகாரம் வழங்கப்படும்.

* மத்திய அரசின் அனுமதியுடன் தேசியத்திட்டத்தின் கீழ் மாகாணசபை வெளிநாட்டுக் கடன் பெறலாம்.
* மாகாணசபைத் தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் நடைபெறும்.
* சட்டம்-ஒழுங்கு விஷயத்தில் பொலிஸ் அத்தியட்சகர் தரம் வரையிலானபொலிஸ் படைக்கு ஆள் திரட்டும் அதிகாரம் மாகாணசபைக்கு வழங்கப்படும்.
* இந்த முக்கிய அம்சங்கள் ஜனாதிபதி சமர்ப்பித்த 30 பக்க அறிக்கையில் உள்ளன.

(அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org